


புதுடெல்லியில் நேற்று முன்தினம் (07.08.2025) நடைபெற்ற வேளாண் விஞ்ஞானி பாரத ரத்னா' எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டு நினைவு சர்வதேச மாநாட்டில் தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் தொடர்பான நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்கும் குப்பையிலிருந்து,

# எரிசக்தி தயாரிக்க ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

### மக்களவையில் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி



புதுடெல்லி, ஆக. 9 - திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 06 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், மக்கும் குப்பையிலிருந்து எரிசக்தியை தயாரிக்கும் திட்டங்களுக்கு, ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? என்றும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்று ஒன்றிய அரசின் எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் எரிசக்தி துறை இணையமைச்சர்; அளித்த பதில் வருமாறு :

தேசிய எரிசக்தி திட்டத்தின் கீழ், தமிழ் நாடு உள்பட 19 மாநிலங்களில் மக்கும் குப்பையிலிருந்து எரிசக்தி தயாரிக்க 298 திட்டங்களுக்கு ரூபாய் 374 கோடிகள் செலவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாட்டிற்கென, ரூபாய் 22 கோடிகள் செலவில் 12 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், மக்கும் குப்பையிலிருந்து பெறப்படும் உயிர் வாயுவின் மூலமாக மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்றும், பயோ சிஎன்ஜி மூலமாக சமையலறை அடுப்புகள் பயனடைகின்றன என்றும், உயிர் எரிவாயு, தொழிற்சாலைகளுக்கு பயனளிக்கின்றன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் தமிழ்நாடு உள்பட 16 மாநிலங்களில் செயல்பட்டு வரும் 78 உயிர் எரிசக்தி திட்டங்களினால் 125 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது என்றும், தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் 5 எரிசக்தி திட்டங்களின் மூலம் 7 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், ஒன்றிய அரசின் இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் பதில் அளித்தார்.






பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் ஊர்வலமாக சென்று கிருஷ்ணாபுரத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர், பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் எனும் சமூகநீதிச் சூரியன்!



ஓர் அரசியல் இயக்கத்தின் தலைவர், தான் ஈடுபட்ட ஒவ்வொரு துறையிலும் உச்சபட்ச சாதனையை நிகழ்த்தி இருக்கிறார் என்றால், உலக அளவில் குறிப்பிடத்தக்க ஒரே தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான்.

அரசியல், இலக்கியம், சினிமா, பத்திரிக்கை என இயங்கிய துறைகளில் எல்லாம் தமது முத்திரையை பதித்தவர். அவர் படைப்புகளுக்கு ஈடு இணையில்லை என்று சொல்லும் அளவுக்கான உயரத்தை நிறுவி விட்டுச் சென்றிருக்கிறார் டாக்டர் கலைஞர்.

கலைஞர் தனது அரசியல் பயணத்தில் எண்ணற்ற சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டி தமிழ்நாட்டின் வளர்ச்சியில் நூற்றாண்டு ஆலமரமாய் நிறைந்திருக்கிறார்.

அவரது ஆளுமைத் திறன், நான் அறிந்தவரையில் மிக நுணுக்கமானது. அனைத்து வாய்ப்புகளிலும் சமூக நீதியை நிலைநாட்டுவதே அவரது இலக்காக இருந்தது. அதற்காக நுணுக்கமாக ஆராய்வார்.

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரை அறிந்து இருக்கிறோம். அவர்களுடனான அனுபவம் நமக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் இல்லாத இடத்தை நிரப்பியது மட்டுமல்ல; அவருக்கென்றே ஒரு தனி இடத்தை உருவாக்கி, சமூகநீதி அரசியலை இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னெடுத்துச் சென்றவர் கலைஞர்.

என் அளவில், கலைஞர் அவர்களை மாபெரும் தலைவராக நான் பார்க்கிறேன். கலைஞரோடு பயணப்பட்டதன் அனுபவம் என்பது, பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோருடன் பயணப்பட்டது போன்ற அனுபவமாகும்.

கல்வி, வேலைவாய்ப்பு, பணியிடங்கள் என அனைத்து மட்டங்களிலும் சமூக நீதி வேண்டும் என அவர் கண்ட கனவுகள் தான் எத்தனை எத்தனை..

சமச்சீர் கல்வி அவர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. காலமாற்றத்துக்கு ஏற்ற கல்வி குறித்த சிந்தனையை அவர்தான் முன்வைத்தார். எல்லோரும் சமமான கல்வி பயில வேண்டும்., சமமான வாய்ப்புகளை மணவர்கள் அடைந்திட வேண்டும்., என்ற குறிக்கோ ளுடன் கல்வியில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை முன்னேற்றிட, புதிய சமசீர் பாடத் திட்டங்களை உருவாக்கினார். ஆனால், பின்னர் அதற்கு சிக்கல் வந்தபோது பதறினார். ஆம்.. அவரின் மாபெரும் கனவாக இருந்த சமச்சீர் கல்விக்கு ஆபத்து என்றபோது, உண்மையிலேயே அவர் வருத்தப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வி தொடர்பான வழக்கு தாக்கல் ஆனபோது, என்னை வழக்காடுமாறு பணித்தார்.

கழகத்தின் சார்பாக எண்ணற்ற வழக்குகளில் நான் வழக்காடி இருந்தாலும், கலைஞர் என்னை உச்சிமுகர்ந்து பாராட்டிய வழக்கு என்றால், சமச்சீர் கல்வி வழக்கில் பெற்ற வெற்றிதான் என் நினைவுக்கு வரும்.

அண்ணா நூற்றாண்டு நூலக வழக்கும் அப்படித்தான். அந்த வழக்கிற்காக அவர் பல ஆலோசனைகள் வழங்கியதுடன், பல தரவுகளையும் திரட்டித் தந்தார். வழக்கில் வெற்றி பெற்று திரும்புகிறோம். அண்ணா அறிவாலயத்தில் பத்திரிகையாளர்கள் கூட்டம். நான் அண்ணா அறிவாலயத்திற்கு சென்று தலைவருக்கு வணக்கம் வைக்கிறேன். “வாய்யா வின்சன்” என்று எனக்கு புதிய பெயர் சூட்டி அழைக்கிறார். என் பெயருக்கான அர்த்தம் மாபெரும் மதிப்புடன் அன்று உயர்ந்தது. அதனை என்றென்றைக்கும் என்னால் மறக்க முடியாது.

அதே போன்று, கழகத்தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில், நான் பெற்ற முதல் வெற்றியே கலைஞருக்காகத்தான் என்று நெஞ்சம் நிமிர்த்தி சொல்லிக் கொள்வேன்... 2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு 7 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மறைந்த நிலையில், மறுநாள் அதாவது ஆகஸ்டு 8 அன்று மெரினாவில் தம் அண்ணனுக்கு அருகில் அவர் துயில் கொள்வதற்கான இடத்தை சட்டப்போராட்டத்தின் வழியே உறுதி செய்து வெற்றி கண்டோம். அந்த வகையில் தமக்கான நீதியையும் போராடியே பெற்ற மாவீரர் அவர்..

மூத்த வழக்கறிஞர்
**பி. வில்சன்**
மாநிலங்களவை
உறுப்பினர், தி.மு.க.



சமூக நீதிக்குக் கேடு நேரும் பொழுதெல்லாம் அதனைத் தடுக்க தன்னால் இயன்ற அனைத்து வழிகளிலும் போராடியவர் அவர்..போராடியதோடு மட்டுமல்லாமல் அப்போராட்டத்தில் வெற்றி கண்டு சமூக நீதியை நிலை நிறுத்தியவர்.. அவருடைய வார்ப்பாகத்தான் இன்றைக்கு நம் கழகத்தலைவர் தளபதி அவர்கள் சமூகநீதி அரசியல் களத்தில் இந்தியாவிற்கே வழி காட்டிக் கொண்டிருக்கிறார்.

அந்த வகையில் இந்திய அரசியல் வரலாற்றில் சமூக நீதிச் சூரியனாய் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் மு. நடராசன்
### ஆகஸ்ட் 9 (2003)



கழகம் தொடங்கியபோதே, உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், இரயில்வே துறையில் பணியாற்றியபோது, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற காரணத்தால், தனது ரயில்வே பணியை இழந்து, முழுநேர கழக பணியாற்ற தொடங்கியவர்.

1960ஆம் ஆண்டு அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர் ஆகிய ஒருங்கிணைந்த தாலுக்கா உள்ளடக்கிய திருச்சி தாலுக்கா வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

திருச்சி மாவட்ட பஞ்சாயத்து கோர்ட் தலைவராகவும் – திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனை ஆர்.எல்.யுனியன் நிவாகியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1953ல் நடைபெற்ற கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம் – 1957ல் நடைபெற்ற நங்கவரம் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “கழகத்தின் மூத்த தொண்டர்களில் ஒருவரும் – அண்ணா திருச்சிக்கு வரும்போதெல்லாம் அவருக்கு தொண்டற்றியவர்களில் ஒருவரும் – அன்பிலார் மாவட்டச் செயலாளராக பணியாற்றிய காலத்திலே, மாவட்டக் கழகத்திலேயே தங்கி, அல்லும் பகலும் பணியாற்றியவர்” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, வடக்களூர் கிராமத்தைச் சேர்ந்தவர்

# மலேசியாவில் இறந்த ரமேஷின் உடலைக் கொண்டுவர நடவடிக்கை!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தலின்படி, சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது!

பெரம்பலூர், ஆக 9 - பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் மலேசியா நாட்டில் சிலான்கூர் என்ற இடத்தில் உள்ள உணவகத்தில் வேலைசெய்து வந்தார் என்றும், கடந்த 02.08.2025 அன்று மதியம் இறந்து விட்டதாகவும், தனது கணவரின் உடலைக் கொண்டு வருதற்கு ரூ.5.லட்சம் ரூபாய் பணம் கேட்பதாகவும், தனது கணவரின் வருமானத்தை வைத்துதான் குடும்பம் நடத்துவதாகவும், வறுமையான நிலையில் அவ்வளவு பணம் இல்லை எனவே, தனது கணவர் உடலை மீட்டு இந்தியா கொண்டு வருமாறு அவரின் மனைவி காவேரி என்பவரும், இறந்தவரின் தாயாரும் கடந்த 03.08.2025 அன்று போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரிடம் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்தனர். 04.05.2025 அன்று மாவட்டஆட்சித்தலைவர் ச.அருண்ராஜியிடமும் கோரிக்கை வைத்தனர்.

இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை துறை அமைச்சர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், 04.08.2025 அன்று அயல்நாட்டினர் துறையின் அரசு செயலாளர் அவர்களுக்கும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் அவர்களுக்கும் இதுதொடர்பாக கடிதம் எழுதியுள்ளார்.

அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கை எடுத்ததால், இறந்த ரமேஷ் உடல் மீட்கப்பட்டு மலேசியா நாட்டில் இருந்து விமானம் மூலம் திருச்சி பன்னாட்டு விமான நிலையத்திற்கு கொண்டு வந்து, நேற்று அதிகாலை வடக்களூர் கிராமத்திற்கு அவரது உடல் கொண்டு வரப் பட்டது.

கோரிக்கை வைத்த மூன்றே நாளுக்குள் தனது கணவரின் உடலை மீட்டுத்தர நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சருக்கும் ,

மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனம் நெகிழ்ந்து இறந்த ரமேஷ் மனைவி காவேரி, தாயார் உள்ளிட்ட குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. செங்குட்டுவன்
### ஆகஸ்ட் 9 (1996)



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**